கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அருப்புக்கோட்டை.

**முன்னிலை திருமதி. S.ஆனந்தவல்லி,B.A.,B.L.,**

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி(மு.கூ.பொ),

அருப்புக்கோட்டை.

**2026 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 27 ஆம் நாள் திங்கட்கிழமை**

**வழக்கிடை மனு எண்.4/2026**

**உள்**

**அசல் வழக்கு எண். 19/2007**

----

சந்திரபிரபாவதி -- மனுதாரர்/வாதி

/எதிர்/

1. நளாயினி (இறந்துவிட்டார்)
2. ரவீந்திரன்
3. ராஜகுரு -- எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனுவானது 07.07.2026ம் தேதியன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு, கடந்த 23.07.2026ம் தேதியன்று இந்த நீதிமன்றம் முன்பு இறுதி விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.N.சோலைராஜ் அவர்கள் முன்னிலையாகியும், 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி இறந்துவிட்ட நிலையிலும், 2ம் எதிர்மனுதாரர்/2ம் பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.B.கார்க்கிசெல்வம் அவர்கள் முன்னிலையாகியும், 3ம் எதிர்மனுதாரர்/3ம் பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திருமதி.P.கல்பனாதேவி அவர்கள் முன்னிலையாகியும் இருந்த நிலையில், இருதரப்பு வாதங்களைக் கேட்டும், இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனைக்காக இருந்துவந்த இம்மனுவினை பரிசீலனை செய்தும், இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கிடும்....

## உத்தரவு

மனுவில் குறிப்பிட்ட நபரான M.விஜய், த/பெ.மைக்கேல் என்பவரை சாட்சியாக விசாரிக்க அனுமதி அளித்து உத்தரவிட வேண்டி, உ.வி.மு.ச. கட்டளை 16 விதி 1,2ன் கீழ் மனுதாரர்/வாதியால் இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ANANTHAVALLI S Digitally signed by ANANTHAVALLI S

**2. <u>மனுதாரர்/வாதி தாக்கல் செய்த மனுவின் சுருக்கம்</u>:**

(1) தாவா சொத்து சம்மந்தமாக விளம்புகை மற்றும் நிரந்தரஉறுத்துக்கட்டளை பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளதாகவும், வழக்கில் தாவா சொத்தை பொறுத்து முதலில் சுவாதீன பரிகாரம் கோரியிருந்து, பிற்பாடு தாவா சொத்து 2ம் பிரதிவாதியால் மனுதாரர் வசம் ஒப்படைக்கப்பட்டுவிட்டதால், சுவாதீனபரிகாரத்தை நீக்கிவிட்டு விளம்புகை மற்றும் நிரந்தரஉறுத்துக்கட்டளை பரிகாரம் மட்டும் கோரியுள்ளதாகவும், தாவா சொத்துக்களில் உள்ள 2 வீடுகளை மனுதாரர் வாடகைக்கு விட்டுள்ளதாகவும், ஒரு வீட்டை மனுதாரர் கைவசம் வைத்துள்ளதாகவும், அதன் கதவு எண்.3/479 ஏ வீட்டில் குடியிருக்கும் M.விஜய், த/பெ.மைக்கேல் என்பவரை விசாரிக்க அனுமதி வேண்டி இம்மனு தாக்கல்.

**3. <u>2 மற்றும் 3ம் எதிர்மனுதாரர்/2 மற்றும் 3ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள மறுப்புரையின் சுருக்கம்:</u>**

(1) மனுதாரர் மனுவில் கூறியுள்ள சங்கதிகளை மனுதாரரே நிரூபிக்க கடமைப்பட்டுள்ளார். மனுதார்/வாதி தாக்கல் செய்துள்ள மனுவில் கூறியுள்ள தாவா சொத்து சம்மந்தமாக விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றும், மேற்படி வழக்கில் தாவா சொத்தை பொறுத்து முதலில் சுவாதீன பரிகாரம் கோரியிருந்தார் என்று கூறியிருப்பது உண்மையென ஒப்புக் கொள்ளப்படுவதாகவும், வாதி கூறியுள்ளது போல் 2ம் எதிர்மனுதாரர் / 2ம் பிரதிவாதியால் தாவா சொத்து எக்காலத்திலும் வாதி வசம் ஒப்படைக்கப்படவில்லை என்றும், மேலும் மேற்படி மனுதாரர் கூறியுள்ள தபசில் சொத்தில் விஜய் என்பவர் வாடகை தாரராக இருந்து வருவதாக மனுதாரர் / வாதி தாக்கல் செய்துள்ள பிராதில் எந்த இடத்திலும் குறிப்பிட்டு கூறவில்லை என்றும், மேலும் மனுதாரர் வாடகைக்கு இருந்து வருவதற்கான எந்த விதமான ஆவணமும் பிராதில் தாக்கல் செய்யப்படவில்லை என்றும், ஆதலால் பிராதில் குறிப்பிடப்படாத சங்கதிகளை பொறுத்தும் அதுசம்மந்தமான சாட்சிகளையும் விசாரணை செய்ய இயலாது என்பதே சட்ட நிலைபாடுஎன்றும், ஆதலால் மேற்படி மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவானது சட்டப்படி ஏற்றுக்கொள்ள தக்கதல்ல என்றும், மேலும் மேற்படி அசல் வழக்கானது ஏற்கனவே காலதாமதம் ஏற்பட்டுள்ள நிலையில் அசல் வழக்கினை மேலும் காலதாமதம் ஏற்படுத்த வேண்டும்

ANANTHAVALLI S Digitally signed by ANANTHAVALLI S

என்ற தீங்கான எண்ணத்தில் மனுதாரர்/ வாதி அவரது கைவசம் உள்ள ஆவணங்களை வைத்து நிரூபணம் செய்ய தயாராக இல்லாத சூழ்நிலையில் வீணாக மேற்படி வழக்கினை காலதாமதம் ஏற்படுத்த வேண்டும் என்ற தீங்கான எண்ணத்துடன் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளதாகவும், இம்மனுவானது சட்டப்படி நிலைக்கதக்கதல்ல என்றும், மனுதாரர்/வாதி தாக்கல் செய்துள்ள மனுவினை 2,3 ம் எதிர்மனுதாரர்கள்/2,3 ம் பிரதிவாதிகளின் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டி எதிருரை தாக்கல்.

4. <u>பிரச்சினை : –</u>

**இம்மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சினை யாதெனில், இம்மனு அனுமதிக்கதக்கதா? இல்லையா ? என்பதே ஆகும்.**

<u>தீர்வு–</u>

5. இருதரப்பும் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. மனுதாரரின் பிராது, மனு மற்றும் 2, 3 ம் எதிர்மனுதாரர்கள்/ 2, 3 ம் பிரதிவாதிகளின் மறுப்புரைகள் பரிசீலிக்கப்பட்டது. இருதரப்பிலும் வாய்மொழி சாட்சியங்கள் எதுவும் இல்லை. ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**6.** வழக்கு கோப்பை பரிசீலிக்கையில், மனுதாரர்/வாதி தாவா சொத்தை பொறுத்து, விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரமும், 3 ம் பிரதிவாதிக்கு 1 ம் பிரதிவாதி எழுதிக் கொடுத்த 14.12.2006 ம் தேதியிட்ட செட்டில்மெண்ட் ஆவண எண்.4450/2006 சட்டப்படி செல்லாது என்று விளம்புகை பரிகாரமும் கோரி வழக்கு தாக்கல் செய்து, மேற்படி வழக்கில் மனுதாரர்/வாதி தரப்பு கூடுதல் சாட்சியத்திற்காக வழக்கு நிலுவையில் உள்ளபோது, இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர்/வாதி தரப்பில், மனுவில் குறிப்பிட்ட நபரான M.விஜய், த/பெ.மைக்கேல் என்பவரை சாட்சியாக விசாரிக்க அனுமதி கேட்கப்பட்டுள்ளது.

7. அசல் வழக்கு விளம்புகை மற்றும் நிரந்தரஉறுத்துக்கட்டளை பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. முதலில் மனுதாரர்/வாதி தாவா சொத்தை பொறுத்து சுவாதீன பரிகாரம் கோரியிருந்து, பிற்பாடு தாவா சொத்து 2 ம் பிரதிவாதியால் மனுதாரர்/வாதி வசம் ஒப்படைக்கப்பட்டுவிட்டதால், சுவாதீனபரிகாரத்தை நீக்கிவிட்டு

ANANTHAVALLI S Digitally signed by ANANTHAVALLI S

விளம்புகை மற்றும் நிரந்தரஉறுத்துக்கட்டளை பரிகாரம் மட்டும் கோரி பிராது சீர்திருத்தம் செய்யப்பட்டுள்ளது. தாவா சொத்துக்களில் உள்ள 2 வீடுகளை மனுதாரர்/வாதி வாடகைக்கு விட்டுள்ளதாகவும், அதில் கதவு எண்.3/479 ஏ வீட்டில் குடியிருக்கும் M.விஜய், த/பெ.மைக்கேல் என்பவரை மனுதாரர்/வாதி தரப்பு கூடுதல் சாட்சியாக விசாரிக்கவேண்டியது அவசியம் என்று சொல்லப்பட்டுள்ளது.

8. 2,3 எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிருரையில், வாதி கூறியுள்ளது போல் 2ம் எதிர்மனுதாரர்/2ம் பிரதிவாதியால் தாவா சொத்து எக்காலத்திலும் வாதி வசம் ஒப்படைக்கப்படவில்லை என்றும், மேலும் மேற்படி மனுதாரர் கூறியுள்ள தபசில் சொத்தில் விஜய் என்பவர் வாடகை தாரராக இருந்து வருவதற்கான எந்த ஆவணமும் தாக்கல் செய்யப்படவில்லை என்றும், அசல் வழக்கினை காலதாமதம் ஏற்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று எடுத்துரைக்கப்பட்டது.

9. கட்டளை 16 விதி 1,2ன் படி, தான் விசாரிக்க விரும்பும் சாட்சிக்கு நீதிமன்றத்தின் மூலம், அழைப்பாணை அனுப்பி விசாரித்து கொள்ளலாம். மனுதாரர்/வாதி அவருடைய வழக்கை போதுமான சாட்சிகள் மூலம் முன்நிறுத்த அவருக்கு உரிமையியல் விசாரணை முறை சட்டத்தின் மூலம் உரிமை உள்ளது. தரப்பினர்கள் அவர்களது வழக்கை நிரூபிப்பதற்குப் போதுமான சாட்சிகளை முன்னிறுத்துவதற்கு, கீழமை நீதிமன்றங்கள் தரப்பினர்களுக்கு போதுமான வாய்ப்புகளை வழங்க வேண்டும் என்பதை இந்நீதிமன்றம் கவனத்தில் கொள்கிறது. தாவா சொத்து வாதிக்கு பாத்தியப்பட்டதா ? இல்லையா ? வாதி கோரிய பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதா ? இல்லையா ? என்பது அசல் வழக்கின் முழுவிசாரணையின் முடிவில் தெரியவரும். வாதியின் வசம் தாவா சொத்து இல்லை என எதிர்மனுதாரர்கள் கூறியுள்ளனர். தாவா சொத்தை பொறுத்து சுவாதீன பரிகாரம் கேட்டிருந்த வாதி பிராதை சீர்திருத்தம் செய்துள்ளார். ஆகவே, எதிர்மனுதாரர்கள் எதிருரையில் கூறியுள்ள தபசில் சொத்தை ஒப்படைக்கவில்லை என்ற சங்கதியை பொறுத்து வழக்கின் முழு விசாரணையின் முடிவில் தான் தீர்மானிக்க முடியும். ஆகையால், இம்மனுவை நீதியின் நலன் கருதி அனுமதிக்கலாம் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. இம்மனு அனுமதிக்கப்படுவதால் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படப்

ANANTHAVALLI S Digitally signed by ANANTHAVALLI S

போவதில்லை என்று இந்நீதிமன்றம் உளமாற நிறைவடைகிறது. ஆகவே, மனுவில் குறிப்பிட்ட நபரான M.விஜய், த/பெ.மைக்கேல் என்பவரை மனுதாரர்/வாதி தரப்பு கூடுதல் சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரிய இம்மனுவை அனுமதிப்பது நீதியின் பால் உகந்தது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**முடிவாக,** இம்மனுவானது அனுமதிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

மேற்படி, உத்தரவு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய இன்று 2026 ம் ஆண்டு ஜூலை மாதம் 27 ம் நாள் பகரப்பட்டது.

ANANTHAVALLI S Digitally signed by ANANTHAVALLI S

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
அருப்புக்கோட்டை(மு.கூ.பொ).

<u>மனுதாரர்/வாதி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u> :- இல்லை

<u>எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் :</u> – இல்லை

ANANTHAVALLI S Digitally signed by ANANTHAVALLI S

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
அருப்புக்கோட்டை(மு.கூ.பொ).

------------------------------------
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
அருப்புக்கோட்டை.
இடைநிலை மனு எண்.4/2026
உள்
அ.வ.எண்.19/2007
சீரான/வரைவு உத்தரவு
நாள் –27.07.2026
-------------------------------------